தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்



International Journal of Tamil Language and Literary Studies
*A Bi-Yearly Peer-Reviewed International Journal*
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Issue - 2, January 2021 Available at: www.ijtlls.com

# நாட்டுப்புறச் சிறுதெய்வங்களின் தொன்மக் கூறுகள்

## Myths of Folk Deities

**முனைவர் ம.விஜயகுமார்,** உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வுத்துறை,
விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, நாமக்கல்மாவட்டம்- 637205.
**Dr. M. Vijayakumar,** Assistant Professor, Pg & Research Department Of Tamil,
Vivekanadha College of Arts And Sciences For Women, Namakkal District-637205.
ORCiD: https://orcid.org/0000-0002-1316-8211
**DOI: 10.38067/ijtlls.2021.v03i02.008**

## Abstract

*The article discusses that how the myths have folklore genre and its orgin of folk deities that are as faith in people's life. Folk deities are a symbol of many cultural groups and they have been following different kind of rituals which is based on folk idols. It also deals with the elements such as culture, oral traditions and epics as the source of various historical as well as sociological figures in the folk deities. The spiritual environment had turned the ancient humans from their hunting instinct and abilities into civilized from barbaric nature. Theological doctrines through religious and folk religions have paved the way for the worship of atmospheric powers such as thunderstorms and rain, celestial phenomena such as sun and stars, natural elements and its forces such as fire and water as in early archaic civilizations. Thus, myths are having different kind of narratives which plays a significant role in the Tamil society. Tamils worshiped all the deities by which it can be categorized into various kinds. Besides, they follow different deities to which they have separated their worship as masculine, feminine, androgynus and without gender. Myths were considered as symbolic narratives which had explicited the actual events of past which were based on their religious group. They have focused on folk religion which emphasizes the village deities which can be formed into numorous spirits and other beings venerated as part of folk traditions and folk dances. Myths were the basic for all their belief and literature which has disclosed the identity and life style of ancient people who are celebrated in the modern time through festivals which is based on folk deities.*

**Keywords:** Folklore genre, Religious beliefs, Folk religion, Tamil Culture

### முன்னுரை

நாட்டுப்புறத் தெய்வங்களைத் தான் சிறுதெய்வங்கள் என அழைக்கின்றோம். சமுதாயத்தில் மக்கள் பொருளாதார அடிப்படையில் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்று இருப்பது போல் பழங்கால சமூகத்திலும் மனிதர்களிடம் இன அடிப்படையில் பாகுபாடு இருந்திருப்பதை தொன்மங்கள் உணர்த்துகின்றன. நம் முன்னோர்கள் ஆண் அல்லது பெண்ணாகவோ இருக்கலாம். இவர்களுடைய கலாச்சார பண்பாடுகளை அறிந்து கொள்ள தொன்மங்கள் பயன்படுகின்றன இவ்வாய்வானது கள ஆய்வின் வழி கிடைத்த தகவல்கள் வரலாற்று ஆய்வின் அடிப்படையில் தொகுத்து தரப்பட்டுள்ளன.

### தொன்மம் – வரையறை

மித் (Myth) என்ற ஆங்கிலச் சொல் 'Mythes' என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Issue - 2, January 2021 Available at: www.ijtlls.com

உருவானது. கிரேக்கத்திலுள்ள மிதாஸ் என்பது சமயம் சார்ந்த அடிப்படையான விளக்கங்களையும், கடல், இயற்கை பல்வேறு ஆற்றல் பற்றிய செய்திகளையும் தருகின்ற மரபுக் கதைகளாகும். மித் என்பது இரண்டு முதன்மையான கருத்துக்களைக் கொண்டுள்ளது. ஒன்று வரலாற்றுத் தொடர்பான முக்கியத்துவம் மற்றொன்று உளவியல் சார்ந்த தன்மைகளைப் பெற்றிருப்பது என்று உலகப் பல்கலைக்கழகக் கலைக்களஞ்சியம் விளக்கம் தருகிறது. (The World University Encycyclopedia Vol.8, P.3411)

**சிறுதெய்வங்களும் தொன்மமும்**

சிறுதெய்வ வழிபாடுகளில் உணவு, மதுபானம், ஆடை போன்ற பொருட்களை வைத்து பூசை செய்கின்றனர். இதனால் நம் முன்னோர்களின் மரபுகளை அறிந்து கொள்ளலாம், சிறுதெய்வங்கள் இடத்திற்கு இடம் மாறுபட்டாலும் மக்களின் பொருளாதார நிலைக்கேற்ப கோயில்கள் எழுப்பப்பட்டு திருவிழாக்களை நிகழ்த்துகின்றனர். திருவிழாக்காலங்களில் இடம் பெறும் வழிபாட்டு மரபுகள் தெய்வங்களின் தொன்மையை விளக்குகின்றன. **கடவுள்கள் மற்றும் மனித சக்திக்கு அப்பாற்பட்ட சக்திகள் பற்றியும் கற்பனையே என்றும் எண்ணும் அளவுக்கு நம்பமுடியாத நிகழ்ச்சிகளைப் பற்றியும் வருவன தொன்மங்கள்** (The Mew Encyclopedia, Macropedia knowledge of depth, Vol.24, P.715) என்று பிரிட்டானிக்கா ஆங்கிலக்கலைக்களஞ்சியம் கூறுகின்றது.

**முசிறி தல வரலாறு /முசுகுந்தன் வரலாறு**

இன்றைய தென் தமிழ்நாட்டில் காவிரி வளம் நிறைந்த வடகரைப் பகுதிகளில் அமைந்தது முசுகுந்தபுரியாகும் அது தற்போது முசுகுந்தபுரம் என அழைக்கப்படுகிறது. முசுகுந்தன் என்பவன் சோழப்பேரரசன், இவன் மிகச்சிறந்த சோழப் பேரரசை நிறுவிய மிகத் தொன்மையான அரசன் கடல் கோள்களுக்கு முன்பே பரந்த தமிழகத்தைத் தன் செங்கோற் பெருமையினால் வளம் பெறச் செய்தவன்.

சோழப் பேரரசனான முசுகுந்தன் முற்பிறவியில், விதூமன் என்னும் காந்தருவனாக இருந்தான். சுகுமாரி என்னும் பெண்ணின் சாபத்தால் மறுபிறப்பில் முசுகுரங்காய் மலைகளில் அலைந்தான். வில்வ மரத்திலே தாவும் போது சருகுகள் உதிர்ந்து அவ்வில்வ மரத்தில் அமைந்திருந்த சிவலிங்கப் பெருமான் திருமேனியை மறைத்தன, இடப் பக்கத்திலிருந்த உமாதேவியார் முசுவை நோக்கி உனக்கு முசுமுகம் அமையும் என்று சாபமிட்டாள். பிறகு தேவியின் கோபத்தையும் சிவபெருமான் தணித்தான். அம்முசுக்கு எதிரிலே தேவியுடன் தோன்றி அவனுக்கு இறையருளைத் தந்து மறைந்தார். அகிதவுட்ரசன் என்ற அவுணன் அமரர்களை வதைத்து இந்திரனை வென்று தேவலோகத்தைக் காத்து வந்தான்.இந்திரன் அஞ்சி இமயமலையில் மறைந்து வாழ்ந்தான். மறைந்து வாழ்ந்த இந்திரன் பிறகு முனிவர் புத்திரிகையைக் கண்டு மயங்கி அவளை வலிந்து கைப்பற்ற முயன்றான். அம்முனிவரின் சாபத்தால் அரக்கனாகி உழன்றான்.அவர்களுக்கு உதவிட முசுகுந்தன் விண்ணுலகை அடைந்து அகிதவுட்டிரசனை வென்று விண்ணுலகைக் காத்தான். **இவன் பேரூர் பட்டீசரைத் தொழுது முசுமுகம் போக்கிக் கொண்டதாகப் பேரூர் புராணம் தெரிவிக்கின்றது (அரு.மருததுரை, அழகு நாச்சியம்மன் திருக்கோயில், ப.10)** என அரு.மருததுரை கூறுகிறார்.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Issue - 2, January 2021 Available at: www.ijtlls.com

மேலும் ஒரு முறை வேட்டை மேற்சென்று திரும்புகையில் படுத்திருந்த வேதியன் ஒருவன் மீது இவன் வீற்றிருந்த குதிரை காலை வைத்துக் கொல்ல அரசனைப் பிரமகத்தி பற்ற அரசன் சிவபூசை செய்து போக்கிக் கொண்டான். இந்திரன் வேண்டுகோளால் குமாரக்கடவுள் வரும் வரையில் தெய்வ உலகத்தைக் காத்து வந்தான். அதற்கு தேவர்கள் உனக்கு என்ன வரம் வேண்டும் எனக் கேட்டனர், நான் அதிகச் சோர்வடைந்தேன். அச்சோர்வு தீர உறங்க வேண்டும் என்று சொன்னான், தேவர்கள் அவ்வாறு அருளிச் செய்து உன்னை இடையில் எழுப்பினவன் சாம்பலாகுவான் என்ற வரம் தந்து சென்றனர். யாருக்கும் தெரியாமல் ஒரு மலைக்குகையில் தனியாக தூங்கினான். அப்போது கண்ணனைக் காலவயநன் துரத்த கண்ணன் பயந்தவர் போல் ஒட்டக்காட்டி இவன் உறங்கும் குகையினுள் புகக் காலவயநனும் புகுந்தான். அவ்விடம் உறங்கும் முசுகுந்தான் கண்விழித்து நோக்க காலவயநன் சாம்பலாயினான் பின் கண்ணன் முசுகுந்தனுக்கு தரிசனம் தந்து பத்திரமாகச் சிரமம் போகக் கட்டளையிட்டான். அங்கு அவன் தவமியற்றி அருள் பெற்றான்.

**முசுகுந்தபுரம் – முசுகுந்தபுரி**

பழங்காலத்தே விரிந்து பரந்த பேரரசை நிறுவிய முசுகுந்தனின் நினைவாக இவ்வூர் முசுகுந்தபுரம், முசுகுந்தபுரி என்று வழங்கப் பெற்றது. சோழப் பேரரசின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த இவ்வூர் நிலநீர் வளத்தாலும் மக்களின் ஒழுக்க மேம்பாட்டினாலும் மேன்மையடைந்திருந்தது.

**முசிரி**

விசயநகர மன்னர் ஆட்சிக் காலத்தில் முசிரிஎனும் பெயரினையும் இவ்வூர் பெற்றது. பிறகு ஆட்சிக்கு வந்த ஆங்கிலேயர்களும் இவ்வூரை முசிரி என்றழைப்பதற்குப் பதிலாக முசிறி என்று அழைத்திருக்கலாம் **(இரா.இராசேந்திரன், முசிறி தலவரலாறு, ப.3-4)** எனஇச்செய்திகளை இவ்வூர்த் தலபுராணம் கூறுகின்றது.

**மதுரை காளியம்மன்**

திருச்சிராப்பள்ளி மாவட்டம் முசிறி வட்டத்தில் காவிரியின் வடபால் இக்கோயில் அமைந்துள்ளது. தொட்டியம் செல்லான் சாம்பான் மதுரைப் பட்டணத்தில் திருமணம் செய்து கொண்டான். செல்லான் சாம்பான் ஆதியிலே தொட்டியத்தில் ஆண்டு வந்த இசங்கராயன், புசங்கராயன் ஆகிய அண்ணன் தம்பிகளிடம் குதிகளைப் பாதுகாத்து அவற்றிற்கு கொள்களாகிய ஆதாரங்களை தயார் செய்து கொடுப்பதும் அவைகள் படுக்க வசதி செய்து கொடுப்பதும் ஆகிய வேலைகளை செய்து வந்தான். அதன் கூலியைக் கொண்டு ஜீவணம் செய்து வந்தான். இவ்வேளையில் மதுரையிலிருந்து செல்லான் சாம்பான் மைத்துனன் சின்னான் சாம்பானிடமிருந்து அவ்வூரில் காளி கோயில் திருவிழா நடப்பதாக கடிதம் வந்தது. உடனே இருவரும் நாமோ ராஜங்கத்தில் இருக்கின்றோம். திருவிழாவிற்கு போக வேண்டுமானால் ராஜாவிடம் உத்தரவு கேட்க வேண்டுமென்று இராஜாவை சந்தித்து மதுரை செல்ல உத்தரவு வாங்கிக் கொண்டு ஆயத்தப்பட்டான்.

அவன் புறப்படும்பொழுது கொங்கு நாட்டில் மழை பெய்து குடகு ஆற்றிலே வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. அப்போது செல்லான் சாம்பான் ஓடக்காரரிடம் சென்று ஐயா நான் அக்கறைக்கு செல்ல வேண்டும் ஒடத்தை தள்ளுங்கள் என்று கேட்கின்றான் ஆனால்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Issue - 2, January 2021 Available at: www.ijtlls.com

ஒடக்காரரோ ஆற்றில் வெள்ளம் வந்துவிட்டதால் ஒடத்தை தள்ளக் கூடாது என்று அரசு உத்திரவிட்டுள்ளது என்று கூறினான். உடனே இருவரும் தனது தோளில் கட்டியுள்ள வெங்கலகட்டி எனும் மேளத்தை தண்ணீரில் போட்டான். அது ஒரு ஒடம் போல் மாறியது தனது கைத் தடியைக் கோலாகக் கொண்டு அக்கரையை அடைந்தான்.அன்று இரவு நிம்மதியாக உறங்கிக் கொண்டிருக்கும் பொழுது காளியம்மன் திருவிழாவிற்கு சகல வீதிகளிலும் மேள, தாளம், தாரை, தப்பட்டைகள் ஒசைகள் முழங்கியது.

கோயில் சன்னிதானத்தில் பூசை செய்து கொண்டிருந்த பூசாரிக்கு அருள் உண்டாகி அங்கு கூடியிருந்த மக்களிடம் அப்பா தொட்டியத்திலிருந்து செல்லான் சாம்பான் வந்துள்ளான். அவனை அழைத்து வந்து மேளம் வாசிக்க சொல்லுங்கள் என்றான். செல்லனை அழைத்து வந்தனர்.அவன் மேளம் வாசித்த ஒலியானது ஊர் முழுவதும் ஒலித்து, சில நாட்களில் திருவிழாவும் முடிந்தது. காளிதேவியிடம் விடை பெற்றுக் கொண்டு தொட்டியம் நோக்கி வந்து கொண்டிருக்கையில் ஒரு வயதான பெண்ணொருத்தி தன்னை பின் தொடர்வது போல் உள்ளது என்பதை அறிந்து திரும்பிப் பார்த்தான் ஒருவருமில்லை.

சிறிது தூரம் வந்த பிறகு ஒரு ஆலமரத்தின் அடியிலே மூதாட்டிரூபக் கொண்டு ஸ்ரீமகாகாளி அமர்ந்திருந்தாள். அவள் செல்லானிடம் நீ எந்த ஊருக்கு போகிறாய் எனக்கேட்டாள், அதற்கு நான் காவிரிக்கரையின் வடபால் அமைந்துள்ள தொட்டியத்திற்கு போகிறேன் என்றான். அதற்கு காளிதேவி என்னையும் உன்னுடன் கூட்டி கொண்டு போ என்றாள் அங்கே என்ன வளம் இருக்கிறது எனக்கேட்டாள். எங்கள் ஊரில் நெல், வாழை, வெற்றிலை, கரும்பு போன்றவைகள் வளமாக இருக்கிறது என்றான்.

பாட்டி உருவில் இருந்த காளியானவள் எனக்கு நா உலர்ந்துவிட்டது தண்ணீர் வேண்டும் எனக் கேட்டாள். செல்லான் காளியை மனதில் நினைத்துக் கொண்டு தன் கையில் இருந்த தடியைக் கொண்டு மண்ணை குத்த பாறையை பிளந்து தண்ணீர் கொட்டியது. உடனே பாட்டியானவள் தன் சுய ரூபத்தை கலைத்து ஐந்து வயது பெண்ணாகவும் பார்ப்பன பெண்ணாகவும், ஏழு வயது பெண்ணாகவும், மஞ்சள் உடை உடுத்தியும் உருமாறிக் காட்டினாள். செல்லான் மூவரையும் வலம் வந்து வணங்கி நீங்கள் யார் என்று புலப்படவில்லையே என்றான். காளியானவள் மதுரை மாநகரில் மகாகாளியாகவும் மதுரையை எரித்த கண்ணகியாகவும் இருந்த வரலாற்றினை செல்லானிடம் கூறினாள். **தொன்மங்கள் மனிதனுடைய சிற்றறிவினால் நிரூபிக்க இயலாத நிகழ்வுகள், மனிதருக்கு அப்பாற்பட்ட உயிர்கள் ஆகியன பற்றித் தொடர்புடையன.தொன்மங்களில் மனிதருக்கு அப்பாற்பட்ட மேலான உயிர்கள் முக்கியப்பங்கு வகித்தன** (Encyclopedia Americana, Vol.19, P.699) என்கிறது. அந்த முப்பெருந்தேவியரும் ஈரூபம் கொண்டு அவனை பின் தொடர்ந்து வந்தனர். வரும் வழியில் கௌத்தராஜ நல்லூர் எல்லை வந்தது. அங்குள்ள வன்னி மரத்து நிழல் குளிர்ச்சியாக இருப்பதைக் கண்டு காளி தாங்கினாள். காளிதேவி தமக்கென ஆலயமும் தேர்த் திருவிழாக்களும் இந்த ஊரின் அரசன் மக்களைக் கொண்டும் செய்து தர வேண்டும் என நினைத்து பல அற்புதங்களை நிகழ்த்தினாள். ஒரு நாள் தம்பியான புசங்கராஜன் குதிரை மீது

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Issue - 2, January 2021 Available at: www.ijtlls.com

ஏறி வேகமாக செல்லும்போது வன்னிமரத்து புற்றுக்கள் சிதலமடைந்து, அதிலுள்ள தெய்வங்கள் அவனைக் கல்லாக உருமாற்றியது. இதனை ஊர் மக்கள் மூலம் அறிந்த மன்னர் கலங்கினர்.

இசங்கராஜன் கண்களால் அக்காட்சியைக் கண்டு கதறி அழுதார். அத்தெய்வத்தின் முன் உங்களுக்கு கோயில் கட்டிப் புஜைகளுக்கு அனைத்தும் செய்து தருகிறேன் என வேண்டினார். புற்றின் அடியில் உள்ள மண்ணை எடுத்து கையால் மனதார வேண்டி சிலையின் மீது தூவினார். மன்னனின் தம்பி மனித உருவம் பெற்றான். எங்கள் சக்தியை அறிந்து கொள்ளவே இவ்வாறு செய்தோம் (T. கர்ணன், பி.என்.கார்த்திகேயன், மதுரை காளியம்மன் தல வரலாறு, ப.41-42) என இக்கோயில் தல வரலாறு கூறுகின்றது.

**காமாட்சியம்மன், பெரியண்ணசாமி**

காமாட்சியம்மன், பெரியண்ணசாமி கோயில் 'ஓமாந்தூர் பெரியகோயில், என்று அழைக்கப்படுகின்றது. காசியிலிருந்த தெய்வங்களான அருள்மிகு கிருஷ்ணபரமாத்மாவும் அவ்விறைவனின் தங்கையான பார்வதிதேவியும் முறையே பெரியண்ணசாமி காமாட்சியம்மனாக மனித உருவில் மாறி தென்னாடுகளிலுள்ள தலங்களைப் பார்வையிட பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் வந்தார்களாம். திருத்தலங்களைப் பார்வையிட்டு கடைசியாய் வைரிசெட்டிப்பாளையம் வந்து வைரிசெட்டி என்பவர் வீட்டில் தங்கினார்கள் மாசிபெரியண்ணசாமி கொல்லிமலையிலுள்ள குன்றுகளைப் பார்த்து வருவதாய் தன் தங்கையிடம் சொல்லிவிட்டு மலைமீது ஏறினார். மலை மீதிருந்த எட்டு குன்றுகளில் ஏறியபோது உயர்ந்த மலை குன்றான மாசிக்குன்று ஆடாததால் அவ்விடத்தில் தங்கினார், அப்பகுதியிலுள்ள மக்கள் மனித உருவிலிருந்த இவரே தெய்வம் எனக் கண்டு வணங்கிவந்தார்கள்.

மலைக்குச் சென்ற தன் அண்ணன் வராததால் காமாட்சி அண்ணனைத் தேடுவதற்கு மலைமீது ஏறும்போது மனித உருவிலிருந்த தெய்வமான காமாட்சியம்மனை காட்டு விலங்குகள் ஒன்றும் செய்யவில்லை. கடைசியாய் மாசிக் குன்றிலிருந்த தன் அண்ணனைப் பார்க்கும் பொழுது தன்னை தெய்வமென இப்பகுதி மக்கள் கண்டு வணங்கியதால் வர இயலவில்லையென கூறினார். **இயற்கை இகழ்ந்த நிகழ்வுகள், கடவுள்கள், உலகப்படைப்பு, உயிர்கள் இவற்றோடு தொடர்புடையவாய் உண்மைக்குப் புறம்பான தன்மையுடையவாய் இயற்கை இகந்த நிகழ்வுகளை நடப்பில் நடக்கவே இயலாவாய் மனிதருக்கு அப்பாற்பட்ட உயிர்களோடு தொடர்புடையவாய் இருப்பனவும் தொன்மங்கள்** ( Random House dictionary, P.877) என்று பொருள் கூறுகிறது.

பச்சைமலை, கொல்லிமலை அடிவாரங்களில் மாடுகளை வைத்து பலபல கும்பல்களாக ஆர்நாடான் சாதியினர் வசித்து வந்திருக்கிறார்கள். ஆர்நாடான் சாதியினர் வசித்து வந்த கும்பல்களில் ஒரு தலைவனின் மகன் வயது 10 காராளன் என்பவன் 100 மாடுகளை ஜெம்பு ஏரி கொல்லிமலை அடிவாரத்தில் மேய்த்து வந்தான். கொல்லிமலையிலுள்ள பெரியண்ணசுவாமியை மலையாளத்தார்கள் பூசித்து பூஜை செய்து வந்தார்கள் அவர்கள் விசேஷமாகச் செய்யும் பூஜையும் ஒரு குறிப்பிட்டவர்களையும் அந்நியர்களையும்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Issue - 2, January 2021 Available at: www.ijtlls.com

அவ்வூருக்குள் அது சமயம் அனுமதிப்பதில்லை. மலையாள பூசாரியார் மகனும், காராளனும் நண்பர்களாக இருந்தனர். பூஜை நடப்பதை அறிந்த காராளன், தானும் அதைக் காண விருப்பம் தெரிவித்து யாரும் அறியாமல் பூஜைகளைப் பார்க்க தன் நண்பனுடன் கூடிப்பேசி மறைமுகமாக அவ்வூர் சென்று நண்பன் உதவியில் ஒரு பரண் அமைத்து ஒளிந்து கொண்டிருந்து பூஜைகளைப் பார்த்தான்.

**காராளன்**

பூசாரிக்கு அருள் வந்து நம்முடைய தெய்வ இரகசியங்களை அந்நியன் ஒருவன் நேரில் பார்த்து அறிந்து கொண்டான். அவனை பிடித்து காலையில் சிரத்தேசம் செய்ய ஆணையிட்டான். காராளனைத் தேடி பிடித்து கை கால்களை காலையில் தண்டனையை நிறைவேற்ற ஏற்பாடு செய்திருந்தனர். காராளன் தனக்கு ஏற்பட்டு இருக்கும் நிர்கதியை மானசீகமாக மனதில் எண்ணி பெரியண்ணசாமி அன்னகாமாட்சி அம்மனைத் துதித்தான். மயக்கத்தில் அப்படியே உறங்கிவிட்டான். அது போழ்து கனவில் நீ, இன்னும் சிறிது நேரத்தில் உன்மாட்டு மந்தையுடன் இருப்பாய் உடனே உன்னை சேர்ந்தவர்கள் மாடுகைளயும் அழைத்துக் கொண்டு இரவோடு இரவாக தென்திசை நோக்கி சென்றுவிடு எந்த இடத்தில் மாடுகள் சுற்றி சுற்றி வருகிறதோ, அந்த இடத்தில் நான் கோயில் கொள்கிறேன் என்று கனவில் மாசிபெரியண்ணசாமி அன்னை காமாட்சியம்மனும் சொல்லி போந்தனர். விரைவில் துயில் நீக்கி கனவில் கண்டபடியே தன் தந்தை மற்றவர்களிடம் கூறி மலைச் சாதியினாரின் பகை வந்து விட்டதால் நாம் இங்கு இருப்பது நன்றன்று என்று கூறி எல்லோரும் மாடுகளை விரட்டிக் கொண்டு தென்திசை நோக்கி வந்தனர். வைரிசெட்டிப்பாளையத்தில் ஒரு இரவும், வீரமச்சான்பட்டியில் ஒர் இரவும், நடுவலூரில் ஓரிரவும் தங்கி பிறகு ஓமாந்தூர் குன்னி மரத்தோப்பில் தங்கிடவே அதுதான் அன்னகாமாட்சி அம்மனும், மாசி பெரியண்ணசுவாமியும் நிரந்தரமாக இருக்க விரும்பும் இடம் என்பதை அறிந்து அவ்விடமே சிறு கோவில் அமைத்து அவனைச் சார்ந்தவர்களும் தங்கி பூஜை செய்து வந்தனர் (நேர்காணல், ம.முத்துக்கருப்பன், நாள் 9.10.2020) என்று தகவலாளர் தெரிவித்தார்.

**பனையடியான்**

பேரூரைச் சேர்ந்த அந்தணர் ஒருவர் காவிரி ஆற்றங்கரையில் ஒரு கல்லில் அமர்ந்து பல் துலக்கிக் கொண்டிருந்த போது அவரே யாரோ ஒருவர் அழைப்பது போல் குரல் கேட்டது. அவர் திரும்பி பார்க்கும் போதுஅவருடைய கண்ணுக்கு யாரும் தெரியவில்லை. அவர் செய்வதறியாது நிலைகுலைந்திருந்த போது மீண்டும் அவரை ஒருவர் அழைக்கும் குரல் கேட்டது. அவ்வந்தணர் பயத்துடன் வீடு வந்து சேர்ந்தார். மறுநாள் அவர் அங்கு சென்று தான் அமர்ந்திருந்த கல்லைப் புரட்டிப் பார்த்த போது பின்பகுதியில் ஐயனார் சிலையொன்று இருப்பதை அறிந்தார். அதனைத்தாம் முன்பு சிலையென உணராது அதன் மீது அமர்ந்திருந்த காரணத்தால் அதனை உணர்த்தவே முதல் நாள் குரல் ஒலித்திருக்க வேண்டுமென்று எண்ணினார். பின்பு அச்சிலையினை எடுத்து வந்து கருப்புசாமி கோயிலின் அருகே வைத்து கோயில் அமைத்தார்.பனைமரத்தடியின் கீழ் இக்கோயில் அமைந்துள்ளதால் பனையடியான்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Issue - 2, January 2021 Available at: www.ijtlls.com

என்று இத்தெய்வத்திற்கு பெயர் வந்திருக்கிறது (நேர்காணல், ம.முத்துக்கருப்பன், நாள் 7.10.2020) எனத் தகவலாளர் கூறினார்.

**பட்டவன்**

முற்காலத்தில் ஐயனார் கருப்புசாமி ஆகிய தெய்வங்களின் கோயில்களே இருந்தனவாம் அக்கோயில்களில் பூசை நிகழ்த்துவதற்காக வைக்கப்பட்டிருந்த மணி, சாமி சிலைகள் முதலிய பொருட்களை கவுண்டர் இனத்தைச் சார்ந்த சிலர் காழ்ப்புணர்வுடன் அவற்றைக் களவாடிச் சென்று பழனிக்கு அருகிலுள்ள “கோழிக்கடவு” எனும் ஊரில் ஒரு வீட்டில் வைத்து விட்டனர். அவர்களின் களவு முயற்சியைத் தடுக்க முற்பட்டு உயிர்நீத்த அதே இனமான கவுண்டர் வகுப்பைச் சேர்ந்த வீரனுக்கு அமைக்கப்பட்ட பட்டவன் சிலையே இங்குக் காணப்படுகின்றது. **இறந்த வீரர்களுக்கு கல்நட்டு வணங்கும் வழக்கமே தமிழகத்தில் பல தெய்வ வழிபாட்டிற்குக் காரணம் (சாமி.சிதம்பரனார், பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும். ப.217)** என சாமி சிதம்பரனார் கூறுகின்றார். பட்டவன் சிலைக்கு அருகே முக்கோண வடிவக்கல் ஒன்று காணப்படுகின்றது. இது பொந்தையம்மன் தெய்வமாகும் (நேர்காணல், அ.கருப்பையா, நாள் 9.10.2020) என்று தகவலாளர் கூறினார்.

**மஞ்சள் மாவு தூவி**

மண்ணச்சநல்லூர் என்ற ஊரிலிருந்து ஒரு பெண் மஞ்சள் விற்பதற்குத் திருத்தலையூருக்கு வருகிறாள், தினமும் மஞ்சள் விற்க வரும்போது ஒருவரிடம் தொடர்பு ஏற்பட்டு கர்ப்பம் அடைகிறாள். அவளின் கர்ப்பம் வீட்டிற்கு தெரிகின்றது. அண்ணன்கள் உன்னுடைய கர்ப்பத்திற்கு காரணம் யார் என்று கேட்கிறார்கள். அவளும் நடந்த சம்பவங்களை கூறுகிறாள். உடனே அவளும் அவளுடைய அண்ணன்களும் திருத்தலையூருக்கு வருகின்றனர். அந்தப் பெண் தன்னுடைய அண்ணன்களை ஓர் இடத்தில் நிற்க வைத்து விட்டு தனியாக வந்து தன்னுடன் தொடர்பு வைத்திருந்தவரிடம் நடந்த சம்பவங்களை கூறுகின்றாள். நம்முடைய அண்ணன்களிடம் இவரைக் காட்டிவிட்டால் கொன்று விடுவார்கள் என நினைத்து அண்ணன்கள் கையில் சாவதை விட நாம் இருவரும் ஒன்றாகவே இறந்துவிடலாம் என நினைத்து கர்ப்பமாக இருக்கின்ற நிலையில் வேலினை எடுத்து தன்னுடைய வயிற்றில் குத்திக் கொள்கிறாள். அதே வேலினைப் பிடுங்கி குத்திக் கொண்டு அவரும் இறந்துவிடுகிறார். **தொன்மம் என்பது கூட்டுக்கற்பனையின் விளைவு ஆகும். அதில் அறிவியல் ஆய்விற்கோ பகுத்தறிவின் பகுப்பிற்கோ இடமில்லை (கதிர்.மகாதேவன், தொன்மம், ப.2)** என்கிறார் கதிர், மகாதேவன் இறந்த பெண் மஞ்சள் விற்றதால் அந்தப் பெண்ணிற்கு “மஞ்சள் மாவு தூவி“ எனப் பெயர் சூட்டி கோயில் அமைத்து தெய்வமாக வழிபாடு நடைபெறுகின்றது (நேர்காணல், செ.தங்கவேல், நாள். 8.10.2020) என்று தகவலாளர் தெரிவித்தார்.

**கவுண்டம்மாள்**

கிழக்கொட்டம் என்னும் ஊரிலிருந்து வீரமுத்து என்பவர் பல ஆண்டுகளுக்கு முன்னர் சாமி கும்பிடுவதற்கு சமயபுரம் சென்றிருக்கிறார்.சாமி கும்பிட்டு வெகுதூரம் நடந்து

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Vol. 3: Issue - 2, January 2021 Available at: www.ijtlls.com

வரும்போது குழந்தையின் அழுகுதல் கேட்டு பின்னால் திரும்பிப் பார்த்து இருக்கிறார். குழந்தை அழுதுகொண்டு வந்திருக்கிறது. நீ யார் என்று கேட்டதற்கு பதில் சொல்ல வில்லை, குழந்தைக்கு கவுண்டம்மாள் என பெயர் வைத்து இவரே வளர்த்து வந்திருக்கிறார்.

ஏரியில் நீர் இருக்கும் போது பலமுறை உடைப்பு ஏற்பட்டு தண்ணீர் முழுவதும் வெளியே வந்திருக்கிறது. யாராலும் ஏரி உடைப்பினை சரி செய்யமுடியவில்லை. ஒருவர் கனவில் இறைவன் தோன்றி பூப்பெய்தாமல் இருக்கும் பெண்ணை பழிகொடுத்தால் ஏரி உடைப்பு நின்று விடும் என கூறியிருக்கிறது. மறுநாள் ஊரிலுள்ள முக்கியஸ்தர்கள் அனைவரும் ஒன்றுக்கூடி எந்தப் பெண்ணை பழி கொடுக்கலாம் என நினைத்து கொண்டு இருந்திருக்கிறார்கள். அப்போது வீரமுத்து என்பவர் நான் வளர்க்கின்ற யாரும் இல்லாத கவுண்டம்மாள் பெண்ணை பழிக்கொடுக்கலாம் எனச் சொல்லி இருக்கிறார்.

அதிகாலையில் ஊர் முக்கியஸ்தர்கள், வீரமுத்து ஆகியோர் ஒன்றுச் சேர்ந்து யாருக்கும் தெரியாமல் ஏரிக்கரையில் அழமான குழித்தோண்டி குழிக்குள் தேங்காய், வாழைப்பழம், பொறிக்கடலை போன்றவைகளை வைத்து அந்தப் பெண்ணை குழிக்குள் இறங்கி வீரமுத்து என்பவர் எடுக்கச் சொல்லி இருக்கிறார். கவுண்டம்மாள் இறங்கி எடுக்கும் போது வீரமுத்து முதலில் குழிக்குள் மண் தள்ளியிருக்கிறார் பின்னர் ஊர் முக்கியஸ்தர்களும் சேர்ந்து குழிக்குள் மண் அள்ளிப்போடும் பொழுது ஐயோ கண், கண் என்று சொல்லி அழுகின்ற போதே குழி முழுவதும் மண்போட்டு அந்தப் பெண்ணை உயிரோடு மூடிவிட்டனர். பிறகு ஏரி உடைப்பு ஏற்படுவது நின்று இருக்கின்றது. **தொன்மம் என்பது கதையாய்ப் புதியதாய்க் கண்டுபிடிக்கப்பட்டது. அன்று, தனி மனிதனால் படைக்கப்பட்டது அன்று ஆனால் மக்களின் அகத்தூண்டுதலால் உருவாகியது (கதிர்.மகாதேவன், தொன்மம், ப.4)** என்று கதிர்.மகாதேவன் குறிப்பிடுகின்றார்.

குழந்தையை குழிக்குள் இறக்கி மண்போட்டு முடியவர்கள் வீட்டிலுள்ளவர்களுக்கு நோய், பல துன்பங்கள் ஏற்பட்டிருக்கின்றது. ஊர் மக்கள் முன்னிலையில் செய்த தவறினால் தான் இந்த குடும்பங்களுக்கு இவ்வளவு துன்பங்களை தருகிறேன் என ஒருவருக்கு சாமி வந்து அருள்வாக்கு கூறியிருக்கிறார். அந்தக் குடும்பங்களைச் சார்ந்தவர்கள் பெண்ணை மூடிய இடத்தில் கோயில் அமைத்து வழிபாடு செய்திருக்கின்றனர். பிறகு நோய்க்குட்பட்டவர்கள் நோயிலிருந்து குணமடைந்துள்ளனர். வீரமுத்து என்பவருடைய வீட்டில் பரம்பரையாக பிறக்கும் குழந்தைகளில் ஒருவருக்கு கண் குருடாக இருப்பதை இன்றும் காண முடிகின்றது (நேர்காணல், ப.பழனியம்மாள், நாள். 8.10.2020) என்று தகவலாளர் கூறினார்.

**முடிவுரை**

தொன்மம் பற்றிய வரையறையில் அறிஞர்கள் கூறிய கருத்துக்கள் நன்கு விளக்கப்பட்டுள்ளன. சிறுதெய்வங்களுக்கும் தொன்மங்களுக்கு இடையே உள்ள தொடர்பினால் நம் முன்னோர்களின் செயல்பாடுகளை அறியமுடிகின்றது. தெய்வங்களின் தோற்றத்திற்கு தொன்மங்கள் கூறும் வரலாறுகள் பெரிதும் பயன்படுகின்றன தற்கொலை செய்து கொண்ட கர்ப்பிணி பெண் தெய்வமாக வழிபடுவதையும், இயற்கையினால் ஏற்படும்

இடையறுகளுக்கு பெண் குழந்தையினை பலியிட்டு சிறு தெய்வமாக கோயில் அமைத்து வழிபடுவதையும் காண முடிகின்றது. சிறுதெய்வங்களின் பிறப்பு இறப்பு பற்றிய நிகழ்வுகள், நம் முன்னோர்களின் பழக்க வழக்கங்கள், வீர தீரச் செயல்கள் முதலியன அறிய தொன்மங்கள் பெரிதும் பயன்படுகின்றன என்பது இவ்வாய்வின் மூலம் அறியப்பட்டுள்ளன.

**நூற்பட்டியல்**

[1] இராஜேந்திரன். இரா, முசிறி தலவரலாறு, அருணா வெளியீடு, முசிறி-1990.

[2] கர்ணன்.டி, கார்த்திகேயன்.பி.என், அருள்மிகு ஸ்ரீ மதுரைகாளியம்மன் தல வரலாறு, சாஸ்தா பதிப்பகம், தொட்டியம், 2003.

[3] சிதம்பரனார்.சாமி,பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும், மோகன் பதிப்பகம், சென்னை, 1987.

[4] மருததுரை. அரு, அருள்மிகு அழகுநாச்சியம்மன் திருக்கோயில் அருணா வெளியீடு, முசிறி.1992.

[5] மகாதேவன். கதிர், தொன்மம், கதிரகம், மதுரை, 1989.

[6] Emanual Fridman, The Encyclopedia Americana Vol.19, Scholastic Library Publishing Inc, Danbury Connecticut, NewYork, 2006.

[7] The World University Enchclopedia, Publishers Company and inc., Washington D.C.1968.

[8] The New Encyclopedia Vol.24, Macropedia Knowledge of depth Britannica Inc, Chicago, 15th Edn.2005.

[9] Random House Dictionary, Random House, New York.

**தமிழில் இக்கட்டுரையை இவ்வாறு மேற்கோளிடுங்கள்:**

**விஜயகுமார். "நாட்டுப்புறச் சிறுதெய்வங்களின் தொன்மக் கூறுகள்."** *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 3, இதழ் 2, சனவரி 2021, பக். 65-73. டிஒஐ: **10.38067/ijtlls.2021.v03i02.008**

**Cite this Article in English (*MLA 8 Style*) as:**
**Vijayakumar. "Myths of Folk Deities."** *International Journal of Tamil Language and Literary Studies*, Volume. 3, Issue. 2, January 2021, pp. 65-73. DOI: **10.38067/ijtlls.2021.v03i02.008**

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி /Author Contribution Statement:** இல்லை /NIL

**கட்டுரையாளர் நன்றியுரை /Author Acknowledgement:** இல்லை /NIL

**கட்டுரையாளர் உறுதிமொழி/Author Declaration:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்./I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது. The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.